2nd November 1962]

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் தற்போதயத் துணை விதிகளின்படி சங்கக் குழுவின் அங்கத்தினர்களை சங்கத்தின் எல்லா அங்கத்தினர்களும் சேர்ந்து ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்க வேண்டும். 1961-ம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (புதிய சட்டம்) 27 (3) (எ) பிரிவின்படி, ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் எந்தக் குழுவிற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினருடைய பதவிக் காலம் மூன்றாண்டுகளென நிச்சயிக்கப் பட்டுள்ளது. ஒவ்வோராண்டும் அக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப் படும் அங்கத்தினர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பதவி யிலிருந்து விலகவும் அதனால் ஏற்படும் காலி ஸ்தானங்களை நிரப்ப வும் புதிய சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

(இ) புதிய சட்டத்தின்கீழ் விதிகள் முடிவாகச் செய்யப்பட்ட வுடன், புதிய சட்டம் அமலுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. மு. பொ. வடிவேல் : கிராமப் புறங்களில் மாதர் சங்கங்கள் இருக்கின்றன. அவற்றை மாற்றி கூட்டுறவு மாதர் சங்கங்கள் என்று அமைத்தால் பல வகையில் வசதியாக இருக்கும். பல நன்மைகளும் ஏற்படும். அதை அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is not very relevant.

Elementary School (Bandahalli)

* 1106 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Chairman of Nallampally Panchayat Union Council (Dharmapuri taluk) broke open the lock of the Record Box of Bandahalli Elementary School to verify the records when the Headmaster of the School was on casual leave; and

(*b*) if so, what action has been taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : ஸார், இது விஷயமாக அரசாங்கத்திற்கு உபாத்தியாயர்களும், பொதுமக்களும் தெரிவித் திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அப்படியிருந்தால் அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : 'இது விஷயம்' என்று சொன்னால் சரியல்ல. நான் பதில் சொன்னேன்—பஞ்சாயத்து யூனியன் தலைவர் அங்கே சென்று பூட்டை உடைக்கவில்லையென்று. ஆனால் அவர்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வையிடப் போனார்கள். அப்போது ஹெட்மாஸ்டர் விடுமுறையில் இருந்த காரணத்தால் வரவில்லை. அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டர் மட்டும் இருந்தார். தலைவர் மதிய உணவு சம்பந்தமான கணக்குகளைப் பார்க்கவேண்டு மென்று கூறினர். பெட்டி பூட்டப்பட்டிருந்தால் அசிஸ்டெண்ட் ஹெட்மாஸ்டர் பூட்டை உடைத்துக் கணக்குகளை எடுத்துக்

காட்டினர். கணக்குகளிலே தவறுதல்கள் இருந்த காரணத்தால் அந்த ஹெட்மாஸ்டர் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். அதுதான் கலெக்டர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

Legislature Library

* 1107 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to accommodate the entire Legislature Library, now distributed in several rooms in one hall; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

Pondicherry and Karaikal (merger with Madras State)

* 1108 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether any representation has been made to Union Government, suggesting that the territories of Pondicherry and Karaikal should be merged with Madras State, after *de-jure* transfer is effected?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.

* 1109 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government of India have forwarded a copy of the Memorandum presented by Sri V. Subbiah, Leader of the Peoples' Front in Pondicherry Assembly, regarding merger of Pondicherry and Karaikal, with the Madras State, for the remarks of the Madras Government; and

(b) if so, the remarks offered thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

திரு. மீ. கலியாணசுந்தரம்: பாண்டிச்சேரி-காரைக்கால்பற்றி சமீபத்தில் பார்லிமெண்டில் சட்டம் இயற்றுவதற்கு முன்பு நம்முடைய அரசாங்கத்தை பிரதம மந்திரி உத்தியோக முறையிலோ, தனிப்பட்ட முறையிலோ கலந்து ஆலோசித்தது உண்டா? அப்போது என்ன அபிப்பிராயம் கூறப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி இந்த அரசாங்கத்தைக் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியமில்லை.

கரும்பு அபிவிருத்தித் திட்டம் (சாலைகள் அமைத்தல்)

* **1110 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கரும்பு அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் கடலூர் தாலூகாவில் மேல் குமாரமங்கலம் பகண்டை ரோடு முடிவடையாமல் இருப்பதற்குக் காரணமென்ன?